# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No. 58/2013**

| | |
|---|---|
| Deposition of witness for | : PW4 |
| Name | : ரேவதி |
| Father's / Husband Name | : செந்தில் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 10th day of December 2024.

**10-12-2024**

**A1 to A4, A6, A7, A10 and A12, A13 present. A14 produced. A5, A11 charges abated. A8 and A9 Petition filed and allowed.**

**முதல் விசாரணை:-**

நான் கிழக்கு தெரு, ஜான்சன்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன செந்தில்வேல் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 22.01.2011 ம் தேதி இரவு 9.00 மணியளவில் நானும், எனது மாமியாரும், எனது நாத்தனாரும் வீட்டில் இருந்தோம். பிறகு 10.00

மணியளவில் எனது நாத்தனார் சத்தம் போட்டார். பின்னாலே நானும், எனது மாமியார் பாப்பாத்தியும் சந்தை அருகில் உள்ள பொது பாத்ரூமிற்கு சென்றோம். அங்கு எனது கணவர் இறந்துகிடந்தார். நானும், என்னுடைய மாமியாரும் கத்திக்கொண்டு வீட்டிற்கு ஓடி வந்தோம். அதன் பிறகு போலிசார் வந்து கையெழுத்து வாங்கினார்கள். அதன் பிறகு மருத்துவமனைக்கு மறுநாள் காலை சென்றோம். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

22.01.2011ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது மாமியார், எனது நாத்தனார் ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது பாலகிருஷ்ணன், சிக்கந்தர், கரிகாலன், பிரதாப் ஆகிய நான்கு பேரும் வீட்டிற்கு வந்து மிரட்டினார்கள் என்றும், அதன் பிறகு என் கணவர் வீட்டிற்கு வந்தார் என்றும், அப்போது சிக்கந்தர், என் கணவருக்கு போன் செய்து வரச்சொன்னார் என்றும், அதன் பிறகு நானும், மாமியாரும், நாத்தனாரும் கணவரை போய் பார்ப்பதற்காக அஸ்தம்பட்டி மேற்கு விநாயகர் கோவில் தெரு, உழவர் சந்தை அருகில் பொது கழிப்பிடம் முன்னால் தெருவில் நின்றிருந்த வெள்ளை நிற டாடா இண்டிகா கார் TN 10 R 9563 பின்புற சீட்டில் இருந்து பாலகிருஷ்ணன், சிக்கந்தர், கரிகாலன், பிரதாப் மற்றும் சிலரும் ஆளுக்கொரு வீச்சறிவாளை எடுத்துக்கொண்டு

பொதுக்கழிப்பிடம் பக்கம் சென்றார்கள் என்றும், அங்கிருந்த மற்றொரு கார் TN 04 L 4027 என்ற காரில் இருந்து சிலர் ஆளுக்கொரு வீச்சறிவாளையும், உருட்டுக்கட்டையும் எடுத்துக்கொண்டு பொதுக்கழிப்பிடம் பக்கம் போனார்கள் என்றும், அங்கு எனது கணவர் பஜாஜ் காலிபர் வண்டியை நிறுத்திவிட்டு நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது பாலகிருஷ்ணன் என் கணவரை பார்த்து நீயெல்லாம் சித்தேஸ்வரனுடன் சேர்ந்துகொண்டு எங்களை ஒழிக்க பார்க்கிறயா என்று சொல்லி பாலகிருஷ்ணன் தன் கையில் வைத்திருந்த வீச்சறிவாளால் என் கணவரின் நடு முதுகில் வெட்டினார் என்றும், என் கணவருக்கு ரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்தார் என்றும், நாங்கள் மூவரும் ஓடிச்சென்று பிரச்சனையை பேசி தீர்த்து கொள்ளலாம் என்று சொன்னோம் என்றும், சிக்கந்தர், கரிகாலன், பிரதாப் மற்றும் சிலரும் அவர்கள் கையில் வைத்திருந்த வீச்சறிவாளால் என் கணவரின் இடது கன்னத்தில் மாறிமாறி வெட்டினார்கள் என்றும், எனது கணவர் அங்கேயே இறந்துவிட்டார் என்றும், அதன் பிறகு அருகிலிருந்தவர்களை கத்தி மற்றும் உருட்டு கட்டையை காட்டி அவர்கள் மிரட்டினார்கள் என்றும், பிறகு அங்கிருந்த ஒரு நபர் என் நாத்தனாரை உனக்கும் இதே கதி தான் என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையை முகவாயில் அடித்தார் என்றும், பிறகு அவர்கள் அனைவரும் எனது கணவரை இழுத்துக்கொண்டு ரோட்டில் வந்து போட்டார்கள் என்றும், அதன் பிறகு அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், நான் மேற்படி சம்பவத்தை பார்த்தேன் என்றும், போலிசார் என்னை விசாரிக்கும் பொழுது நடந்ததை நான் சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு

பயந்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகளின் வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்கள்.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.